# இணைப்பாட நடவடிக்கைகளும் நாமும்

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதாவாது' என்பது முதுமொழி. அது முற்றிலும் உண்மையே! புத்தகத்தின் வாயிலாகக் கற்கும் கல்வியைக் கொண்டு மட்டும் நாம் நம் வாழ்வில் சிறந்து விளங்க முடியாது. சிறப்பாக வாழப் பட்டறிவும் தேவைப்படுகிறது. அது இன்றைய மாணவர்களுக்கு இணைப்பாட நடவடிக்கைகளின் மூலம் கிடைக்கிறது.

'புறப்பாட நடவடிக்கைகள்' என்று அழைக்கப்பட்டு வந்தவை இப்போது முக்கியத்துவம் பெற்று 'இணைப்பாட நடவடிக்கைகள்' என்று அழைக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் அவை மாணவர்களுக்கு அளிக்கும் நன்மையே! பள்ளிகளில் பலவிதமான இணைப்பாட நடவடிக்கைகள் இருக்கின்றன. அவை விளையாட்டுகள், சீருடைக் குழுக்கள், இசைக்குழுக்கள், மன்றங்கள் என்று பலவகைப்படுகின்றன. மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ப இணைப்பாட நடவடிக்கைகளில் சேர்ந்து பயன் பெறலாம். மேலும் உயர்நிலை நான்காம் வகுப்பின் இறுதியில் புள்ளிகளைப் பெறலாம். இப்புள்ளிகள் தொடக்கக்கல்லூரிக்குச் செல்ல அவர்களுக்கு மிகவும் பயன்படும்.

மாணவர்கள் தம்மிடம் ஒளிந்துள்ள திறமைகளை வெளிப்படுத்த, இணைப்பாட நடவடிக்கைகள் மிகவும் துணைபுரிகின்றன. வேகமாக ஓடும் திறமையுடைய மாணவர்கள், திடல் தடக்குழுவில் சேர்ந்து தமது திறமையை வளர்த்துக் கொள்ளலாம். மேலும், அவர்கள் பள்ளியைப் பிரதிநிதித்துப் போட்டிகளில் கலந்துகொண்டு தம் பள்ளிக்கும், குடும்பத்திற்கும் பெருமை தேடித்தரலாம். செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சாரணர் இயக்கம் போன்ற சீருடைக் குழுக்கள் மாணவர்களிடையே கட்டொழுங்கை வளர்க்கின்றன. அவை மாணவர்களைத் துடிப்புமிக்க தலைவர்களாக ஆக்குகின்றன; மாணவர்களின் மனதில் தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டுகின்றன. மேலும், அவர்களைப் பொறுப்புள்ள குடிமக்களாக ஆக்கப் பெரிதும் துணைபுரிகின்றன.

இசைக்குழுக்கள் மாணவர்களைச் சிறந்த இசைக்கலைஞர்களாக மாற்றுகின்றன. அவை சிங்கப்பூர் இளையர் விழா போன்ற போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கின்றன. இம்மாதிரியான போட்டிகளில் கலந்து கொள்வதனால் மாணவர்களின் திறமைகள் நன்றாக வெளிப்படுகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவற்றைத் தவிர, இலக்கிய மன்றம், கணினி மன்றம், பேச்சுப் பயிற்சி மன்றம் எனப் பல மன்றங்கள் இருக்கின்றன. இம்மன்றங்கள் மாணவர்களின் வெவ்வேறு திறமைகளை வளர்க்கின்றன. அவர்களைப் பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்கின்றன. எனவே, ஒருவர் ஏட்டுக்கல்வியில் மட்டும் சிறந்து விளங்காமல் இணைப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்கலாமல்லவா?

இணைப்பாட நடவடிக்கைகள் மாணவர்கள் தமது திறமைகளை வளர்த்துக்கொள்ள மட்டும் உதவுவதில்லை. இவற்றினால் அவர்களுக்குப் பல புதிய நண்பர்களும் அறிமுகமாகிறார்கள். இவ்வாறு இணைப்பாட நடவடிக்கைகளினால் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் எண்ணிலடங்கா. எனவே, இவை மாணவர்களை மிகச் சிறந்தவர்களாக ஆக்க ஒரு நுழைவாயிலைப்போல் செயல்படுகின்றன என்று சொல்லவும் வேண்டுமா?

**ச. காயத்ரி,**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**